சுருக்கம்

முதலமைச்சர் பொது நிவாரண நிதி – சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாரம், தீர்த்தகிரிப்பட்டி அங்கன்வாடி மைய குழந்தைகள் சிறுவன் நிஷாந்த் மற்றும் சிறுவன் குரு ஆகிய இருவரும் 18.08.2011 அன்று மையத்திலிருந்து வெளியே செல்லும் போது கழிவுநீர்த் தொட்டியில் விழுந்து மரணமடைந்ததற்கு அவர்களது குடும்பத்தினருக்கு – முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இழப்பீடாக ஒரு குழந்தைக்கு ரூ.50,000/– வீதம் மொத்தம் ரூ.1,00,000/– நிதியுதவி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந7–1) துறை

அரசாணை (ப) எண்.44

நாள்.15.05.2013
திருவள்ளுவராண்டு 2044
வைகாசி 1
படிக்கப்பட்டது:

1 கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரது ந.க.எண்.சி–1/2011, நாள் 19.08.2011.

2 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையரது கடித ந.க.எண்.12325/என்சி3/2011, நாள் 19.08.2011, 14.02.2012 மற்றும் 07.01.2013.

+++++

ஆணை :

மேலே 1ல் படிக்கப்பட்ட கடிதத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டார குழந்தை வளர்ச்சித் திட்டம், தீர்த்தகிரிபட்டி அங்கன்வாடி மையத்தில் பதிவு செய்யப்பட்ட திரு. பாண்டியன், திருமதி. செல்வி தம்பதியரின் குழந்தைகள், சிறுவன் நிஷாந்த் (வயது 4½) மற்றும் சிறுவன் குரு (வயது 3) ஆகிய இருவரும் 18.08.2011 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் மையத்திலிருந்து தாமாகவே வெளியில் சென்ற பொழுது, மையத்திலிருந்து 100 அடி தூரத்திற்குள் இருந்த கழிவு நீர் தொட்டிக்காக தோண்டப்பட்ட குழியில் விழுந்துள்ளார்கள் என்றும், இந்த குழியானது தீர்த்தகிரிப்பட்டியை சேர்ந்த திரு.வெங்கடபதி, த/பெ திரு. சக்கரபாணி என்பவரால் கழிவு நீர் தொட்டிக்காக கட்டப்பட்டு, மழை நீரால் நிறைந்திருந்ததாகவும், மேற்படி இரு குழந்தைகளும், அந்த தொட்டியில் உள்ள நீரில் மூழ்கி இறந்துள்ளார்கள் என்றும், குழந்தைகள் இறந்துள்ளது குறித்து இரண்டு மணி நேரத்திற்கு பிறகு பொது மக்கள் பார்த்துள்ளனர் என்றும், இறந்த இரண்டு குழந்தைகளின் உடல்களையும் எடுத்து கொண்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது எனவும்,

மேலும் இது குறித்து பர்கூர் காவல் நிலையத்தில் குற்றவியல் வழக்கு எண்.174 ஆக (நீரில் மூழ்கி இறந்தது) பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

2. இது தொடர்பாக, அங்கன்வாடி மைய பணியாளர் திருமதி. வளர்மதி, மற்றும் உதவியாளர் திருமதி. வள்ளி ஆகிய இருவரும் தங்கள் பணியில் கவனக்குறைவாக இருந்தமைக்காக தற்கால பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும், இறந்து போன குழந்தைகளின் பெற்றோர் மிகவும் வேதனையிலும், துன்பத்திலும் உள்ளதாகவும், மேலும் அவர்கள் ஏழ்மை நிலையில் உள்ளதாலும், அவர்களுக்கு இழப்பீடு தொகையாக குழந்தை ஒன்றுக்கு ரூ.50,000/– வழங்கலாம் எனவும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

3. மேலே பார்வை 2ல் படிக்கப்பட்ட கடிதங்களில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், இறந்துபோன குழந்தைகளின் பெற்றோர் மிகவும் வேதனையிலும் துன்பத்திலும் மற்றும் ஏழ்மை நிலையில் உள்ளதாலும் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து இழப்பீட்டுத் தொகை வழங்கலாம் என்ற கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவை அரசுக்கு பரிந்துரைத்துள்ளதுடன், மேலும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள சமூக பாதுகாப்பு திட்ட SSS தனித்துறை ஆட்சியர், அரசு சார்பாக எந்த ஒரு நிதியும் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு இதுவரை பெற்று வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளதால் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இழப்பீட்டு தொகை வழங்க ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரது கருத்துரு மற்றும் அதன் மீதான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையரது பரிந்துரையினையும் அரசு கவனமாக பரிசீலித்து, சிறுவன் நிஷாந்த் மற்றும் சிறுவன் குரு ஆகியோரின் பெற்றோரது குடும்ப சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் "இந்நிகழ்விற்காக அரசின் வேறு எந்த திட்டத்தின் கீழும் நிதியுதவி எதுவும் பெற்றிருத்தல் கூடாது" என்ற நிபந்தனையுடன், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இழப்பீடாக ஒரு குழந்தைக்கு ரூ.50,000/– வீதம் மொத்தம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) வழங்கி ஆணையிடுகிறது.

5. முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிக்கப்பட்ட ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)ற்க்கான காசோலையை முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், தரமணி, சென்னை 600 113 அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர் நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி) த்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர் அவர்கள் மேலே பத்தி 5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை காசோலையாகவோ அல்லது அஞ்சலக சேமிப்பு வங்கி கணக்கு மூலமாகவோ திரு.சி.பாண்டியன் மற்றும் திருமதி.செல்வி (இறந்த குழந்தைகளின் தந்தை மற்றும் தாய்) ஆகிய இருவருக்கும் வழங்கி, இருவரிடமும் வரிவில்லையிட்ட பற்றுச்சீட்டைப் பெற்று நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறும் மேலும் இது குறித்து அரசின் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறைக்கு தெரியப்படுத்தும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.168/JS(RSM)/CMPRF/2013, நாள்.09.05.2013ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பி.எம். பஷீர் அஹமது
அரசு செயலாளர்

பெறுநர்
அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்
நிதி (மு.பொ.நி.நி) துறை, சென்னை –9 (3 படிகள்)
முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை– 113
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
முதலமைச்சரின் தனிப்பிரிவு, சென்னை–9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9

நகல்
நிதி (சந) (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி) துறை, சென்னை –9
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சந2) த்துறை, சென்னை –9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

RL. Shudarsyhi 16/5/2013

பிரிவு அலுவலர்.

16/5/13